புதுவை அரசு
போக்குவரத்துத் துறை

எண்.10/போ.து/வ.போ.அ./2011 தேதி. 31-03-2011

<u>செய்திக் குறிப்பு</u>

புதுவை யூனியன் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட சில பொது மற்றும் தனியார் வாகனங்களின் எண் பலகையில் வாகன எண்ணிற்கு மேலோ அல்லது கீழோ சிவப்பு வண்ணத்தில் அல்லது வேறு வண்ணத்தில் புதுவை யூனியன் பிரதேசம் அல்லது புதுச்சேரி மாநிலம் என தமிழில் மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருப்பதாக போக்குவரத்துத் துறையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அவ்வாறு வாகன எண் பலகையில் எழுதுவது மற்றும் தங்களுக்கு பிடித்த படங்களையோ அல்து போட்டோக்களையோ ஒட்டுவது, மோட்டார் வாகன சட்டம் மற்றும் விதிகளின்படி குற்றமாகும்.

எனவே, இந்த செய்திக் குறிப்பின் மூலம் அனைத்து பொது மற்றும் தனியார் வாகன உரிமையாளர்களுக்கும் அறிவுறுத்தப்படுவது யாதெனில், மேற்கூறியதுபோல், தங்களின் வாகனங்களில் எழுதப்பட்டிருப்பின், அதனை உடனடியாக நீக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் மேற்படி வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, மோட்டார் சட்ட விதிகளின்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

T. Karikalan

(த. கரிகாலன்)
போக்குவரத்து ஆணையர்